Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

தமிழரசு

மூரகூ 11-6-1985 செவ்வாய்க்கிழமை (வைகாசி 29 தம்மாசி 21) முழக்கம் 126

இராணுவ பாதுகாப்பை கொழும்பு பஸ்கள் பெறவில்லை!

யாழ்ப்பாணம் கொழும்பு பாதை தனியார் பஸ்ளுக்கு வழங்கப்பட விருந்த ராணுவ பாதுகாப்பை, பஸ் நிறுவனங்கள் பயன்படுத்த முன் வராமையால், கடைசி நேரத்தில் குறிப்பிட்ட பாதுகாப்பு ரத்துச் செய்யப் பட்டது. யாழ்ப்பாணம் அரசாங்க அதிபரின் வேண்டுதலின் பேரில் சகல பஸ்களுக்கும் வவுனியாவிலிருந்து புத்தளம் வரை நேற்று ராணுவ பாது காப்பு வழங்கப்பட விருந்தது இதன் பிரகாரம் சகல பஸ்களும் நண் பகல் ஒரு மணிக்கு முன்னர் வவுனியா அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நிறுத்த வேண்டுமென கேட்கப்பட்டிருந்தன. ஆனால் ஒரு பஸ் கூட அவ் வாறு நிறுத்தப்படவில்லை என வவுனியா — 4ஆம் பக்கம் பார்க்க

இரு தரப்பும் யுத்த நிறுத்தம் செய்யவேண்டும் என லண்டனில் தமிழர், சிங்களவர் கூடி முடிவு!

(லண்டன்)

இலங்கையில் நெருக்கடி நிலைமைக்குத் தீர்வு காணப் பட வேண்டும் என்ற தீர்மானத்தை பிரிட்டனில் வாழும் இலங்கைத் தமிழர், சிங்களவர், மற்றும் சிறுபான்மையோர் கூடிய கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளனர்.

அங்குள்ள ரோயல் பொது நல அமைப்புச் சங்கத்தில் இவர்கள் கூடிய போது இலங்கை அரசாங்கமும், தற்போதைய தகராறில் சம்பந்தப்பட்ட குழுக்களும், அரசியல் கட்சிகளும் இப்பிரச்சினைக்குத் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்தியதுடன், இலங்கையில் வாழும் சகல சமூகத்தவர்கள் சிறுபான்மையினர் ஆகியோரின் உரிமைகளையும், கௌரவத்தையும் அங்கீகரிக்கும் வகையில் இத்தீர்வு அமைய வேண்டும் என அத் தீர்மானத்தில் குறிப்பிட்டுள்ளது.

இந்த உடன்படிக்கைக்குவர சம்பந்தப்பட்ட சகல தரப்பினரும் விடுக்கொடுக்க வேண்டும் எனவும் கூறப்படும் அத் தீர்மானத்தில், இதற்கு ஏதுவாக சகல வன்முறைச் சம்பவங்களும் எந்தத் தரப்பிலும் இருந்து வராதவாறு யுத்த —4ஆம் பக்கம் பார்க்க

★ 'இந்து' பத்திரிகைக்கு உமா மகேஸ்வரன் அளித்த பேட்டி:

அரசின் நிபந்தனையை பொறுத்து பேச்சுவார்த்தை பற்றி முடிவு!

ஆயுதங்களை எம்மை தூக்கசெய்தது அரசே; அவர்களே முதலில் கீழே போடவேண்டும்!

(சென்னை)

"இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்கு எம்மைப் பேச்சுவார்த்தைக்கு அழைக்குமானால், அவர்கள் விதிக்கும் நிபந்தனைகளைப் பொறுத்தே நாம் தீர்மானம் எடுப்போம்" என்று 'புளொட்' தலைவர் உமா மகேஸ்வரன் 'இந்து' பத்திரிகைக்கு அளித்த பேட்டியொன்றில் தெரிவித்துள்ளார். இப்பேட்டி நேற்றைய 'இந்து'வில் வெளியானது.

"தமிழ் இளைஞர்களை ஆயுதம் எடுக்கத் தூண்டியது அரசாங்கமே. எனவே எம்மை ஆயுதங்களைப் போடுங்கள் என்று கேட்பதற்கு முன்னர், தமது படைகளின் ஆயுதங்களைப் போட வைப்பது அரசின் கடமை" எனவும் அவர் இங்கு சுட்டிக்காட்டியுள்ளார்.

தமிழர் விடுதலைக்கூட்டணிக்கும் தங்கள் கழகத்துக்குமிடையில் மூன்று நான்கு தடவைகள் பேச்சுவார்த்தை நடை —4-ஆம் பக்கம் பார்க்க

வாகனத்துக்கு ஐந்து லீட்டர் இன்று பெற்றோல் வழங்கல்

இன்று யாழ். பல நோக்குக் கூட்டுறவு சங்க பெற்றோல் நிலையத்தில் வாகனங்களுக்கு பெற்றோல் மட்டும் வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஒரு வாகனத்துக்கு தலா ஐந்து லீற்றர் பெற்றோல் வழங்கப்படும். ஆனால் இந்த வாகனங்களுக்கான எண்பத்தைந்தாம் ஆண்டு அனுமதிப்பத்திரம் பொலிஸ் அதிபரினால் வழங்கப்பட்ட உடைமைக்கும் பாவனைக்குமுரிய பத்திரம் மற்றும் அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட கொடுப்பனவு அதிகாரப்பத்திரம் ஆகியவற்றையும் சமர்ப்பிக்க வேண்டாம்.

கொள்கலன்களுக்கு பெற்றோல் வழங்கப்படமாட்டாது எனவும் அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார்

மக்கள் விடுதலைக் கழகத்துக்கு நன்றி

புதுதிகவாதினமற்றவரான ஜனுப் ஜெயிலை இக்கத்தின் —4-ஆம் பக்கம் பார்க்க

வாழைச்சேனை கடதாசி ஆலையில் துணிகர கொள்ளை

(மட்டுநகர்)

வாழைச்சேனை கடதாசி ஆலையில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற கொள்ளைச் சம்பவமொன்று பற்றி பொலிஸில் புகார் செய்யப்பட்டுள்ளது.

கடதாசி ஆலையின் களஞ்சிய அறைக்குள் நுழைந்த இனம் தெரியாதவர்கள் அங்கிருந்த துப்பாக்கிகள், ரேடியோ 'செட்'டுகள், தீயணைக்கும் சாதனங்கள் உட்பட பலபெறுமதியான பொருட்களைக் கொள்ளையடித்துச் சென்றன — 4 ஆம் பக்கம் பார்க்க

இரு பெண்களுக்கு துப்பாக்கிச் சூடு

நேற்று முன்தினம் முள்ளியவளையில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூடு சம்பவத்தால் காயமடைந்த எஸ்.தேவகி(18) —4-ஆம் பக்கம் பார்க்க

திருப்பித்தருமாறு அரச அதிபர் கேட்கிறார்:

குருநகர் உணவுக்களஞ்சியத்தில் 404 மூடை அரிசி கொள்ளை!

இதுவரை காலமும் எவ்வித தடங்கலுமின்றி நடந்து வந்த உணவு விநியோகம், குருநகர் உணவுக்களஞ்சியத்தில் நேற்று முன்தினமிரவு இடம்பெற்ற கொள்ளையால் இப்போது பாதிப்புற்றுள்ளது. இதனால் உணவு விநியோகத்தில் பெரும் இடையூறுகள் ஏற்படக் கூடுமென யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் அச்சம் தெரிவித்துள்ளார்.

இக்கொள்ளையால் எதிர்காலத்தில் ஏற்படக்கூடிய இடையூறுகளை மனதில் கொண்டு எடுத்த ஒன்றே கால் லட்சம் ரூபா பெறுமதியான 404 மூடை அரிசியையும் திருப்பி ஒப்படைக்குமாறும் அரசாங்க அதிபர் வேண்டுகோள் விடுத் —4ஆம் பக்கம் பார்க்க

சட்டசபையில் நெடுஞ்செழியன் பேச்சு:

ஈழப்பிரச்சினை: தமிழகத்தின் உணர்ச்சிகளை மத்திய அரசுக்கு நாம் எடுத்துரைப்போம்

"இலங்கை இனப்பிரச்சினையைப் பொறுத்த வரையில் தமிழக மக்களின் உணர்ச்சிகளையும், சட்டமன்ற உறுப்பினர்களின் எண்ணங்களையும் தமிழக அரசு சரியான முறையில் மத்திய அரசுக்கு உரிய வகையில் எடுத்துரைக்கும்" இவ்வாறு தமிழக சட்டசபை தலைவர் இரா. நெடுஞ்செழியன் நேற்று நடைபெற்ற சட்டசபைக் கூட்டத்தில் கூறினார்.

கேள்வி நேரம் முடிந்ததும் சட்டசபை உறுப்பினர்களான காங்கிரஸ் - குறளரசு ஜெயபாரதி, திராவிட முன்னேற்றகழகத் தலைவர் கே. அன்பழகன் ஆகியோர் இலங்கை வாழ் தமிழர்கள் இராணுவத்தினரால் மிகக் கடூரமாகத் தாக்கப்படுவதாகவும், துன்புறுத்தப்படுவதாகவும் இதனை உடனடியாக மத்திய அரசின் கவனத்திற்குக் கொண்டுவர வேண்டுமெனவும் வேண்டு கோள் விடுத்தனர்.

புதுடில்லியில் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பா —4ஆம் பக்கம் பார்க்க

கட்டடப் பொருள் கொள்ளை

யாழ். கட்டடப் பொருட்கள் கூட்டுத்தாபன விற்பனை நிலையத்தில் பகல் இரண்டு மணிய – 4ஆம் பக்கம் பார்க்க

திருமலையில் அமைதி; மூதூரில் 8000 பேர் அகதிகள்

திருமலையில் இப்பொழுது அமைதி நிலவுவதாகவும் அப் பகுதியில் பதற்றம் தணிந்துள்ளதாகவும் லங்கா புவத் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பொன்றில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

தமிழ்த் தீவிரவாதிகளின் தாக்குதல்கள் இடம் பெறலாமென்ற இரகசியத் தகவல்களையடுத்து திருமலை மாவட் ...4ஆம் பக்கம் பார்க்க

கிளிநொச்சியில் அப்போதிக்கரி சூடுபட்டு மரணம்

நேற்று முன்தினம் இரவு ஏழு மணியளவில் கிளிநொச்சி ஆஸ்பத்திரி அப்போதிக்கரிஎஸ். ----4-ஆம் பக்கம் பார்க்க

தீவுப்பகுதியின் பத்து வீதிகளுக்கு புதிதாக மின்னிணைப்பு வழங்கப்படும்

(மண்கும்பான்)

தீவுப் பகுதியில் இரண்டு உதவி அரசாங்க அதிபர் பிரிவில் உள்ள பத்து வீதிகளுக்கு புதிதாக மின் இணைப்பை வழங்க இலங்கை மின்சார சபை முன்வந்திருக்கின்றது.

இதன் அடிப்படையில் பத்து வீதிகளின் மதிப்பீடுகளைத் தயாரித்து அனுப்பும்படி வேலணையில் உள்ள மின்சார அதிகாரியை இலங்கை மின்சார சபை கேட்டுக் கொண்டதற்கிணங்க வேலணை மின்சார அதிகாரி திரு. மார்க்கண்டு விஜயசிறி பத்து வீதிகளின் மதிப்பீடுகளையும் தயாரித்து அனுப்பியுள்ளார்.

மதிப்பீடு செய்யப்பட்ட வீதிகளின் விபரங்கள் பின்வருமாறு: மண்டைதீவு முருகன் வீதி, (யாழ்ப்பாண மின் அத்தியட்சகருடைய அதிகாரத்திற்குட்பட்டது) மண்கும்பான் மேற்கு வீதி, வேலணை கிழக்கு செட்டிபுலம்காளுவாய்த்துறை வீதி, வேலணை கிழக்கு நாச்சிமார் வீதி, வேலணை. வேலணை ஆலடிவீதி, வேலணை மேற்கு சங்கத்தகேணி ஞான வைரவர் வீதி, நாரந்தனை மெலிஞ்சிமுனை வீதி, புங்குடுதீவு கோட்டைக்காடு வீதி, புங்குடுதீவு ஈசான முத்தம் வீதி கரம்பன் கண்ணகி வீதி ஆகிய வீதிகளே இவைகளாகும்.

இந்த மதிப்பீடு அங்கீகரிக்கப்பட்டதும் உடனடியாக வேலைகள் யாவும் தொடங்கப்படவிருப்பதாக நமது நிருபருக்கு திரு. விஜயசிறி தெரிவித்துள்ளார்.

புராணங்கள் எனப்படுபவை உயர் சமய இலக்கியங்கள்

(இருபாலை)

புராணங்கள் என்பன உயர்ந்த சமய இலக்கியங்களாகும். அவை ஆழமான தத்துவக் கோட்பாடுகளை சாதாரண மக்களுக்கு புரியக் கூடிய முறையில் விளக்குகின்றன. பெரிய புராணம் இறை வழிபாடு, சிவாலயத் தொண்டு, அடியார் பெருமை இந்து சமயப் பண்பாடு, கலாசாரம், என்பன பற்றி எடுத்துக் கூறுகிறது.

இவ்வாறு கோப்பாய் ஆசிரியர் பயிற்சிக் கலாசாலை "விதப்தகம்" மண்டபத்தில் நடைபெற்ற சேக்கிழார் விழாவின் போது தலைமை வகித்த திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் எடுத்துக் கூறினார்.

இவ்விழாவிற்கு பிரதம அதிதியாக "சிவதர்மவள்ளல்" க. கனகராஜா கலந்து கொண்டு பல நூல்களை மாணவர்களுக்கும், படிப்பகத்திற்கும் அன்பளிப்பாக வழங்கினார்.

திருமதி மங்கையற்கரசி திருச்சிற்றம்பலம் தொடர்ந்தும் பேசுகையில், சிவகசிந்தாமணியை விரும்பிப் படித்த மன்னனின் மனதை மாற்றி சில கதைகளில் ஈடுபாடு கொள்ளச் செய்ய சேக்கிழார் சுவாமிகள் பெரிய புராணத்தைச் சிறந்த காப்பியமாக பாடியருளினார் என்றார்.

பாடசாலைகளிலும், ஆலயங்களிலும், மடங்களிலும் புராண படனம் நடைபெற சைவ மக்கள் முன் நின்று செயற்பட வேண்டும் என்றும் கூறினார்.

பேராசிரியர் திரு. எஸ். சண்முகதாஸ் சொற்பொழிவாற்றும் பொழுது சங்க காலத்தை தொடர்ந்து காரைக்கால் அம்மையார் பதிகங்கள் பாடி பக்தி இயக்கத்தின் முன்னோடியாக விளங்கினார் என்றும் அவரைத் தொடர்ந்து நாயன்மார்களும், ஆழ்வார்களும் பக்தி நெறியை வளர்த்தனர் என்றும் பெரிய புராணம் பக்திச் சுவை நிரம்பிய காப்பியம் என்றும் குறிப்பிட்டார்.

அங்கிலிக்கன் திருச்சபையின் பேராயரது வடக்கு விஜயம்

(நல்லூர்)

"அங்கிலிக்கன் திருச்சபையின் கொழும்பு திருமண்டலப் பேராயர் பேரருட்திரு சுவீதின் பெர்னாண்டோ ஆண்டகை உத்தியோகபூர்வமான விஜயமொன்றை மேற்கொண்டு வடபகுதிக்கு விஜயம் செய்யவிருக்கிறார்.

இம்மாதம் 14-ந் திகதி வெள்ளிக்கிழமை வவுனியாவுக்கு விஜயம் செய்யும் ஆண்டகை வவுனியா ஆலயத்தில் திட்டப்படுத்தல் ஆராதனையை ஒப்புக் கொடுத்து அருளுரை நிகழ்த்துவார்.

15-ந் திகதி சனிக்கிழமை கிளிநொச்சிக்கு விஜயம் செய்து கிளிநொச்சி கருணா நிலைய ஆலயத்தில் திட்டப்படுத்தல் ஆராதனையை ஒப்புக் கொடுத்து அருளுரை நிகழ்த்துவார். அன்று மாலை கருணா நிலையத்தில் மாணவிகளுக்கென அமைக்கப்பட்டுள்ள புதிய மண்டபத்தை ஆசீர்வதித்துத் திறந்து வைப்பார். அத்துடன் மாணவிகளுக்கான புதிய மண்டபத்திற்கு அடிக்கல் நாட்டிவைப்பார்.

16-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை யாழ்ப்பாணத்திற்கு விஜயஞ் செய்யும் ஆண்டகை கண்டுக்குளி பரி. யோவான் தேவாலயத்தில் திட்டப்படுத்தல் ஆராதனையை ஒப்புக் கொடுத்து அருளுரை நிகழ்த்துவார். அதனைத் தொடர்ந்து பரி. யோவான் ஆலயச்சபையினர் வழங்கும் காலைப் போசனத்திலும் கலந்து கொள்வார்.

17-ந் திகதி திங்கட்கிழமை காலை நல்லூர் குருமனையில் நடைபெறும் வடபகுதி அக்கிலிக்கன் திருச்சபைக் குருமார்களின் கூட்டத்தில் பேசுவார்.

ஆண்டகையின் வடபகுதி விஜயத்துக்கான ஏற்பாடுகளை யாழ்ப்பாண ஆர்ச் டீக்கன் அருட்திரு சாம். டி. ஹோர் சிஸ்டன் அடிகளார் மேற்கொண்டுள்ளார்.

வரி விளம்பரம்

விற்பனைக்கு

எழுதுமட்டுவாள் சந்தைக்கு அருகில் 10 பரப்பு தென்னங் காணியும் கூரை போடாத புதிய கல் வீடும் (42' நீளம்-22' அகலம்) உடன் விற்பனைக்கு உண்டு. உத்தேச விலை 1,35,000-தொடர்பு;கா. குமாரசாமி லக்சுமி ஸ்ரோர், கண்டாவளை.

காணவில்லை

பா. சிவராஜன் என்பவரது டயறி, அவரது ஆள் அறிமுக அட்டையுடனும் வேறும் சில தவிதாவேஸாளுடன் தொலைந்துவிட்டது, தயவுசெய்து கண்டெடுத்தவர்கள் ஈழமுரசு காரியாலயத்தில் ஒப்படைக்கவும். I C NO. 561821321 V தகுந்த சன்மானமும் வழங்கப்படும்.

வேண்டுகோள்

அகில இலங்கைக் காந்திய சேவா சங்கம் சுமார் நான்கு வருடங்களாக பொதுக் கூட்டம் கூட்டப்படாது இயங்கி வருகின்றதாம்.

இதனால் நிர்வாகம் சீர் குலைந்த நிலையில் காணப்படுவதாகச் சுட்டிக் காட்டிப் பொதுக் கூட்டத்தை வெகுவிரைவில் கூட்டுமாறு நிர்வாக உறுப்பினர்கள் திரு. க. ச. கந்தசாமி, திரு. எஸ். சிவஞானம், திரு. வி. கே. சுப்பிரமணியம் ஆகியோர் உட்பட மற்றும் பலரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

முதுகலைமாணி பட்டம் பெற்றார்

திருமதி சரோஜா சிவசந்திரன் அண்மையில் யாழ். பல்கலைக் கழகத்தில் புவியியற்றுறையில் முதுகலைமாணிப் பட்டம் பெற்றார்.

மேற்படி பட்டம் பெறுவதற்கு, "இலங்கையின் தேயிலைக் கைத்தொழிலில் அமைப்பு ரீதியான மாற்றங்கள் 1970 - 1980" என்ற தலைப்பில் யாழ். பல்கலைக் கழகப் புவியியற்றுறைத் தலைவர் பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை அவர்களின் மேற்பார்வையின் கீழ் ஆய்வு மேற்கொண்டு ஆய்வுக் கட்டுரை சமர்ப்பித்திருந்தார்.

வேலணையைச் சேர்ந்த திருமதி சரோஜா சிவசந்திரன் கொழும்பு இலங்கை மன்றக் கல்லூரியில் சிரேஷ்ட விரிவுரையாளராக 1983 வரை கடமையாற்றினார். தற்போது சென்னையில் பாரத வங்கித் தொழிற் சங்க ஆராய்ச்சி நிறுவனத்தில் இயக்குனராகப் பணி புரிகின்றார்.

தஞ்சாவூர் தமிழ்ப் கல்லூரியின் உதவி பெற்று "இலங்கையிலிருந்து இந்தியாவுக்கு அண்மைக் காலங்களில் புலம்பெயர்ந்த தமிழர்கள் நிலை" பற்றிய ஆய்வில் தற்போது ஈடுபட்டுள்ளார்.

மாதா உற்சவம்

(வேலணை)

வட பகுதியில் பிரசித்தி பெற்ற ஊர்காவற்றுறை கரம்பொன்னில் அன்னை வேளாங்கண்ணி மாதா ஆலய வருடாந்த நவநாள் உற்சவம் மிகவும் சிறப்பாக நடைபெற்றது. கடந்த வாரம் திருப்பலிப் பூசையுடனும், திருச்சொரூப சுற்றுப் பிரகாரத்துடனும் விழா நிறைவேறியது.

மண் சுமந்த மேனியர்

(சித்தங்கேணி)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரி பாடசாலை அபிவிருத்திநிதிக்காக யாழ். பல்கலைக் கழக கலைப்பீட மாணவ மாணவிகள் வழங்கும் "மண் சுமந்த மேனியர்" என்னும் சமூக சீர்திருத்த நாடகம் ஒன்று வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியில் இம்மாதம் 11 ந் திகதி செவ்வாய்க் கிழமை பிற்பகல் நடைபெறவுள்ளது.

கட்டடத் திறப்பு பாடசாலை தின விழாக்கள்

(காரைநகர்)

மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலையின் புதிய கட்டடத் திறப்பு விழாவும் பாடசாலைத் தின விழாவும் இம்மாதம் பன்னிரண்டாம் திகதி அதிபர் திரு. வி. பொன்னுத்துரை தலைமையில் நடைபெறும்.

வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. எம். சிமியரம் பிள்ளை பிரதம விருந்தினராகவும், மானிப்பாய் வட்டாரக் கல்வியதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்கின்றனர். மாணவர்களின் கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.

✻ நுணாவில் சந்தி அருள் ஜோதி சாந்தினி தம்பதிகளின் மகள் நித்தியா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✻ சாவகச்சேரி, செருக்கல் பிள்ளையார் கோவிலடி கருணாகரன் - விஜயலட்சுமி தம்பதிகளின் மகள் சுரேந்தினி இன்று தனது இரண்டாவது பிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ குருநகர், மாடிவீடு குணம்-சகுந்தலா தம்பதிகளின் மகன் உமாகாந் இன்று தனதுபிறந்த நாளைக் கொண்டாடுகின்றார்.

✻ யாழ்ப்பாணம், கோவில் வீதி செல்வராஜா தம்பதிகளின் மகன் விஜேந்திரா தனது பிறந்த நாளை இன்று கொண்டாடுகிறார்.

✻ சாவகச்சேரி தபால் கந்தோர் வீதி சிவநாதன் கமலேஸ்வரி தம்பதிகளின் புதல்வி மித்திரா தனது நாலாவது பிறந்த நாளை இன்று கொண்டாடுகின்றார்.

✻ கோப்பாய் தெற்கு சின்னராஜா சுசிலாதேவி தம்பதிகளின் மகள் அகல்யா இன்று தனது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

வசந்தத்தில் கருகிய குணநாயகம் ஏ. ஜி. ஏ.

பேராதனைப் பல்கலைக் கழகத்திற்கும் சரவணைக் கிராமத்திற்கும் 1952ம் ஆண்டு தொடக்கம் மிகநெருங்கிய தொடர்பு உண்டு. பல்கலைக்கழகத்திற்கும் ஒரு கிராமத்திற்கும் தொடர்பு உண்டென்றால் அக்கிராமத்தின் இளைஞர்கள் யுவதிகள் அப்பல்கலைக் கழகம் புகுந்து பட்டங்களைப் பெற்று பதவிகள் பெற்று பதவிகளில் காலப்போக்கில் உயர்வதே கருத்தாகும். இப்படி இலங்கையின் சிரேஷ்ட பல்கலைக் கழகம் புகுந்து பலதுறைகளில் பட்டங்கள் பெற்ற சரவணை மாணவ மாணவிகள் பற்பலராவர். இவர்களில் அமரர் ஆறுமுகம் குணநாயகம் ஒருவராவார்.

கல்வி, பண்பு, உயர்பதவி இம்மூன்று செல்வங்களையும் ஒரு மனிதன் ஒருங்கப் பெறுதல் அரிது. இவற்றில் ஒன்று இரண்டு ஒருவர் பெறலாம். அவை எவையாகவும் இருக்கலாம், ஆனால் மூன்று செல்வங்களையும் ஒன்றாக இளமையில் பெறுதல் அவரை அவரைச் சார்ந்தவர்களிற்கும் அவரின் பதவியால் நன்மை பெறுவோர்களிற்கும் பெருமைதருவது.

இவ்விதத்தில் தனது அரசாங்க உயர் பதவிக் கடமையில் தான் கடமையாற்றிய வடமாகாணத்தில் உள்ள எல்லா அரசாங்க ஆலுவலகங்களிலும் பேரன்பையும் பெரு மதிப்பையும் பெற்ற எங்கள் கிராமத்தின் இளம் சந்ததியின் தலைமகன், உதாரண புருஷன், கண்ணிமைக்கும் நேரத்தில் எம்மையெல்லாம் விட்டுப் பிரிந்தமை தான் அவரது மரணத்தின் வேதனையை தாங்கொணாத வொன்றாக்குகின்றது.

1980ம் ஆண்டு தை 15ம் திகதி சரவணை நாகேஸ்வரி வித்தியாசாலையின்பொன்விழாவை அமரர் மங்கள விளக்கேற்றி தொடக்கி வைத்த கண்கவர் கோலம் சரவணை மக்களின் அகக் கண்முன் என்றும் நிலைத்து நிற்கும். இதேபோல் சரவணை இளைஞர் சங்க விளையாட்டு விழாவை பல்லாயிரக்கணக்கான மக்கள் முன் நின்று மனமாரவரவேற்று நிகழ்த்தி வைத்த பெருமையும் அவரின் தாய்க்கிராமத்தின் சரித்திரத்தில் இடம்பெறும் நிகழ்ச்சிகளில் சிலவாகும்.

"சென்ற பொழுதிற் பெரிதுவக்கும் தன் மகனை சான்றோன் எனக் கேட்ட தாய்" என்ற தெய்வப் புலவன் வள்ளுவன் வாக்கை மெய்ப்பித்த சரவணையின் உத்தமமகனான அமரர் ஆறுமுகம் குணநாயகம் தனது வசந்த காலத்திலேயே கோடை, இலையுதிர், மாரி, கரலங்களென எட்மன்ட் ஸ்பென்சர் விவரித்த காலங்களைக் காணாது மறைந்தமையையிட்டு கிராமமே கண்ணீர் வடிக்கின்றது.

★ இ. வி. தளையசிங்கம்

கல்விப் பணிப்பாளர் பேச்சு

நாலாயிரம் பாடசாலைகளுக்கு நிரந்தர அதிபர்கள் இல்லை

(கிளிநொச்சி நிருபர் மு. விவேகானந்தன்)

"வருங்கால சமூகத்தினரை சிருஷ்டிக்கும் பணி பாடசாலைகளை நிர்வகிக்கும் அதிபர்கள் கைகளிலேயே தங்கியுள்ளது. இலங்கையின் முக்கிய பாடசாலைகளின் பெயர்கள் இன்னும் புகழோடு போற்றப்படுவதற்கு காரணம் அந்த நாட்களில் அப்பாடசாலைகளை நிர்வகித்த அதிபர்களேயாகும்" இவ்வாறு கிளிநொச்சி முல்லைத்தீவு மாவட்டங்களின் கல்விப் பணிப்பாளர் ஜனாப் எம். எம். மன்சூர் குறிப்பிட்டார்.

கடந்த மூன்றும் திகதி திங்கட்கிழமை கிளிநொச்சி இந்து மகா வித்தியாலயத்தில் இந்து மகா வித்தியாலய அதிபர் திரு. பொன். சபாபதி இலங்கை கல்விச் சேவையில் நியமனம் பெற்றமை குறித்து நடாத்தப்பட்ட பாராட்டுக் கூட்டத்தில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் "இலங்கை முழுவதுமுள்ள சுமார் பத்தாயிரம் பாடசாலைகளில் சுமார் நான்காயிரம் பாடசாலைகளுக்கு நிரந்த அதிபர்கள் இல்லை. காரணம் வசதிகுறைந்த இடங்களிலுள்ள பாடசாலைகளுக்கு அதிபர்களாக கடமையாற்ற ஒருவரும் விரும்புவதில்லை. எமது கல்வி மாவட்டத்திலும் அதிபர்கள் ஆசிரியர்களின்றி நான்கு பாடசாலைகள் மூடப்பட்ட நிலையில் இருக்கின்றது. இதனால் அப்பகுதிகளைச் சேர்ந்த மாணவர்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர். எனவே கல்விச்சேவையிலுள்ள எவரும் வசதியான இடங்களை மட்டும் நாடிப்பற்ற வேண்டும் என்று எண்ணுதல் கூடாது.

வட்டக்கச்சி மகா வித்தியாலயத்தின் பெயர் ஜப்பான் நாடு வரை தெரிந்திருப்பதற்கு காரணம் அப்பாடசாலையின் முன்னாள் அதிபராக இருந்த போது திரு. பொன் சபாபதி அவர்கள் ஆற்றிய திறமையான சேவையே" என்று கூறினார்.

மேற்படி வைபவத்தில் கிளிநொச்சி கல்வித் திணைக்களத்தைச் சார்ந்த சகல அதிகாரிகளும் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

உதய சிந்தனை

கடினமான அனுபவம்தான் ஜனநாயகம் என்பதன் சரியான உபாத்தியாயர்.

-- மகாத்மா காந்தி

37, கண்டி வீதி, யாழ்ப்பாணம். தொலைபேசி: 23336

இதயஒலி

11-6-1985 செவ்வாய்க்கிழமை (குரோதன வைகாசி 29)

மந்திரத்தால் மாங்காய் விழுமா?

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு ஆறு வாரங்களுக்குள் தீர்வு காணப்பட்டுவிடும் என்று அரசாங்க சார்பு பத்திரிகையான 'டெய்லி நியூஸ்' தலைப்புச் செய்தி வெளியிட்டுள்ளது.

மூன்று மாத காலத்துக்குத் தீவிரவாத இயக்கங்களும், அரச படைகளும் ஆயுதங்களைக் கீழே போட்டுவிட்டு, சுமுகமான சூழ்நிலையில் பேச்சுவார்த்தை நடத்த நிபந்தனை விதிக்கப்பட்டுள்ளதாக 'சன்' பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

ஜனாதிபதி ஜெயவர்த்தனா உச்சி மகாநாட்டில் காணப்பட்ட முடிவுகளின் அடிப்படையில் இனப் பிரச்சினைக்குத் தீர்வுகாண நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும், பிரச்சினை சுமுகமாகத் தீர்க்க முடியுமென்ற நம்பிக்கை தமக்கு உண்டென்றும் பாரதப் பிரதமர் ராஜீவ் காந்தி எகிப்திலும், பாரிஸிலும் அறிவித்துள்ளார்.

நாளை அமெரிக்கா செல்லும் ராஜீவ் அங்கும் அதனையே சொல்வார் எனவும் நம்பலாம்.

ஆனால், தமக்கும் ஜனாதிபதிக்குமிடையே நடைபெற்ற அந்தரங்க பேச்சுக்கள் பற்றிய விபரங்களை வெளியிட அவர் மறுத்துவிட்டார்.

உச்சிமாநாடு அந்தரங்கமாக நடைபெற்றதால் அதன் விபரங்களை வெளியிடுவது சம்பிரதாயத்துக்கு மாறானது என்று கருத்து வெளியிட்டுள்ளார் அமைச்சர் அதுலத்முதலி.

ஆனாலும் ஜனாதிபதி ஜெயவர்த்தனா புதுடில்லியிலிருந்து புறப்படும் போது பத்திரிகையாளர்களிடம் தெரிவித்த விபரம், இரு தலைவர்களும் எவ்வாறான இணக்கத்தைக் கண்டிருப்பார்கள் என்பதை ஊகிக்க வைத்தது.

இரு தலைவர்களும் பேச்சுவார்த்தை மூலம் கண்ட இணக்கத்தை ஆவணமாகத் தயாரித்து, ஒப்பங்களைப் பெறுவதற்கு இப்போது நடவடிக்கை எடுக்கப்படுவதாக 'இந்து' வில் லி. கே. ரெட்டி எழுதியுள்ளார்.

இதற்கிடையே, இரு பகுதிக்குமிடையில் பேச்சுவார்த்தை நடக்குமானால், தமிழ் இளைஞர் இயக்கங்களின் பிரதிநிதிகளும் கலந்துகொள்ளக்கூடியதாக இருக்க வேண்டுமென்று கூட்டணியினர் நிபந்தனை விதித்தனர்.

வடக்குக் கிழக்கில் அடிப்படையில் மாவட்டசபை உருவாகுமென்றும், பின்னர் ஒருங்கிணைப்பு சபைகள் அமைக்கப்படலாம் என்றும் ஜனாதிபதி தெரிவித்த கருத்து டென்மார்க்கில் நடைமுறையிலிருப்பது போன்று 'யூனியன் கவுன்ஸில்' ஆட்சிமுறையைக் கொண்டதாக இருக்குமென்று சென்னைக்குத் தகவல் கிடைத்துள்ளது.

தற்போது தணிந்திருக்கும் தீவிரவாத நடவடிக்கைகளும், படைவீரர்களின் நடவடிக்கைகளும் நல்லதொரு சூழ்நிலையை உருவாக்குவதாக தெரிகின்ற போதிலும், "இது நிரந்தரமானதாக இருக்குமா?" என்ற சந்தேகமும் கூடவே எழுகின்றது.

இவைகளுக்கெல்லாம் காரணம், அரசாங்கம் தனது முடிவையோ அல்லது பேச்சுவார்த்தையில் காணப்பட்ட இணக்கத்தையோ முடுந்திரமாக இன்னமும் மறைத்து வைத்திருப்பதுதான்.

டாக்டரிடம் நோயை மறைத்து வைத்திருப்பதால் நோயாளி குணமடைய முடியாது என்பர்.

அதுபோலவே, தமிழர் பிரச்சினைத் தீர்வுக்கான ஆலோசனைகளை, தமிழர் பிரதிநிதிகளிடம் தெரிவிக்காது வைத்திருப்பதன் மூலம் இனப்பிரச்சினைக்கு ஆறுவார காலத்தில் அரசாங்கம் எவ்வாறு தீர்வுகாண முடியும்?

தமிழர் கூட்டணித் தலைவர்கள் இருட்டினில் இருக்கின்றனர்.

தமிழ் தீவிரவாதிகட்கு பொது மன்னிப்பு வழங்கத் தயார் என்று கூறும் அரசாங்கத் தலைவர்கள், இனப்பிரச்சினைக்கான முடிவை அவர்களுக்குக்கூட தெரிவிக்காது எதற்காக மறைத்து வைத்திருக்க வேண்டும்.

பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முன்னர் அதற்கான ஒரு சூழ்நிலை உருவாக்கப்பட வேண்டும் என்று கூறிவரும் ஜனாதிபதியும் அவரது குழுவினரும், இப்போது ஏற்பட்டிருக்கும் சூழ்நிலையை அதற்கு ஏற்றதாகக் கருதவில்லையா?

பூனைக்கு யார் மணி கட்டுவது என்பதுதான் இரு பகுதியினருக்குமிடையில் 'மௌனப் போரு'க்குக் காரணமாக இருக்கலாம்.

எதுவாயிருந்தாலும் மந்திரத்தால் மாங்காயை விழுத்த முடியாது.

நல்ல சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி, அரசாங்கம் தனது திட்டத்தை இப்போதாவது பகிரங்கப்படுத்த வேண்டும்.

கவர்னர் அர்ஜுன்சிங் தெரிவித்துள்ளார்

பஞ்சாப் பிரச்சினைத் தீர்வில் பாரபட்சமான முடிவு இல்லை

(புதுடில்லி)

பஞ்சாப் பிரச்சினையை முடிவுக்குக் கொண்டுவர அரசாங்கம் எந்த விதமான ஒரு தலைப் பட்சமான முடிவையும் எடுப்பதற்கான சாத்தியம் இல்லை என பஞ்சாப் கவர்னர் திரு. அர்ஜுன்சிங் தெரிவித்துள்ளார்.

சண்டிகட்டில் பத்திரிகையாளர் சங்க மதிய போசன கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் பஞ்சாப் பிரச்சினை சம்பந்தமாக உரையாற்றினார். முன் நிபந்தனைகள் எதுவும் இல்லாவிடின் அகாலி தலைவர்களுடன் பேச்சுவார்த்தைகள் நடத்தப்படலாம் என்றும் அவர் இங்கு தெரிவித்தார்.

ஜனநாயக அமைப்பிற்கு ஏற்ப பேச்சுவார்த்தைகள் மூலம் ஏற்படும் அமைதியான ஒற்றுமையின் அடிப்படையால் மட்டுமே பஞ்சாப் சிக்கலைத் தீர்க்க முடியும் என்றும் கூறிய திரு. அர்ஜுன்சிங், அரசாங்கத்திற்கும் அகாலிகளுக்கும் இடையில் நடைபெறும் பேச்சுவார்த்தைகள் நட்புரீதியாக நடக்க வேண்டும் எனவும் கூறினார்.

மூன்றாண்டுப் போர் முடிவு; லெபனானைவிட்டு இஸ்ரேலியப் படைகள் விடைபெற்றன

பாலஸ்தீனிய கெரில்லாக்களுக்கு எதிராக இஸ்ரேலியப் படைகள் லெபனான் நாட்டில் 1982, ஜூன் மாதம் ஆரம்பித்து வந்தன. ஏறத்தாழ அந்நாட்டின் மூன்றிலொரு பாகம் முழுவதும் இஸ்ரேலியத் துருப்புகளின் வசமாயின. தெற்கு லெபனானின் நாட்டுப்புறமாக இருபது கிலோ மீட்டர்கள் வரை, அதாவது பனிரண்டு மைல் தொலைவுவரை பாதுகாப்பு வலயமாகும் என இஸ்ரேலியர்கள் பிரகடனப்படுத்தி வைத்திருந்தனர்.

பாலஸ்தீனிய கெரில்லாக்களை ஒழித்துக்கட்டும் தமது பணி நிறைவேறியதும் 1985, ஜனவரி மாதம் இஸ்ரேலியப் படைகள் வாபஸாக ஆரம்பித்தன. கட்டம் கட்டமாக நடைபெற்று வந்த இந்த வாபஸ் தற்போது இறுதித் தறுவாயை நெருங்கிவிட்டது என இராணுவப் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

இஸ்ரேலியப் பிரதமர் ஷிமோன் பெரேஸின் ஓர் உதவியாளர் இதுபற்றிக் குறிப்பிடுகையில், பாதுகாப்புக் காரணங்களை முன்னிட்டு வாபஸ் பூரணமாகும் நாள், முன்னரே அறிவிக்கப்பட மாட்டாது எனவும், படைகள் யாவும் முற்றாக இஸ்ரேலை அடைந்த பின்னரே இதுபற்றிச் செய்தி வெளியிடப்படும் எனவும் கருத்துத் தெரிவித்தார்.

இதுவரை 654 இஸ்ரேலியர்கள் போரில் மாண்டுள்ளனர். மூவாயிரத்து எண்ணூறு இஸ்ரேலியப் போர்வீரர் காயமடைந்துள்ளனர்.

"போரத் தலைவிதி தொலைந்தது!" எனும் ஏடு லம் தமது சொந்தத் தேசத்திற்கு மீளும் இஸ்ரேலிய சிப்பாய்கள் மத்தியிற் கரைபுரண்டோடுகிறது அவர்கள் சென்று கொண்டிருந்த ட்ரக் வண்டி ஒன்றில் அவர்களுடைய சொந்த, கொல்பழம் மொழியாகிய ஹீபுறூவில் "குட்பை லெபனான், உன்னை நாம் இனிமேல் காணவே வரமாட்டோம்—நீ அழைத்தாலும்கூட, நாம் உன்னிடம் ஒருபோதும் திரும்பி வரவே மாட்டோம்" என ஒரு சுவரொட்டியில் எழுதப்பட்டிருந்தது.

பெரும் மகிழ்ச்சி மேலிடலுடனும் போர்த்தந்திரங்களுடனும் இஸ்ரேலியப் படையினர் ஒருவர்மீது ஒருவர் ஷாம்பெயினைச் சிவிறி ஆரவாரித்தபடியே இராணுவ வாகனங்களில் தமது நாட்டுக்கு மீண்டவண்ணமிருக்கின்றனர். "போதும்! மூன்று ஆண்டுகள் போர் போதுமென்னப் போதும்!" என்பதே அவர்களது ஏகோபித்த குரலாக இருந்தது.

பாரிஸில் இந்திய உணவுவகைகள்

(பாரிஸ்)

பிரான்ஸில் நடைபெறும் 'பாரதத் திருவிழா'வில் இடம் பெற்றுவரும்உணவுப் பொருட்களும், இந்திய இசை நடனங்களும் பிரான்ஸ் மக்களைப் பெருமளவு கவர்ந்து வருவதாக அறிவிக்கப்படுகிறது.

பாரிஸ் நகரில் உள்ள உலகபுகழ் பெற்ற 'எஃபெல்' கோபுரத்திற்கு அருகே மசாலா தோஸை, புரியாணி, கேசரி போன்ற இந்திய உணவுப் பொருட்களைச் சுவைப்பதற்காகப் பெருமளவு பிரான்ஸ் மக்கள் கூட்டம் கூட்டமாக சென்று வருகின்றார்கள்.

ஏழாலை விழாவில் வற்புறுத்து

அதிபர் ஆசிரியர் பெற்றோர் இணைப்பு இன்றியமையாதது

(யாழ்ப்பாணம்)

"மாணவர்களின் ஆளுமை விருத்திக்கு அவசியமான அனைத்தையும் வழங்க வேண்டியது பாடசாலையின் பொறுப்பாகும். மாணவரின் ஆளுமை விருத்திக்கு உடல், உளவளர்ச்சி அவசியம். அதற்கு அவசியமான அம்சங்களில் விளையாட்டும் ஒன்றாகும். சர்வதேச இளைஞர் ஆண்டில் நமது மாணவர்களுக்குத் தலைமைத்துவப் பயிற்சி அளிப்பதற்குப் பாடசாலைகள் ஏற்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். பாடசாலைகளில் விளையாட்டுப் போட்டிகள் நடைபெறும் பொழுது கல்வியில் பின்தங்கிய மாணவர்களும் தமது ஆற்றலை வெளிக்காட்டித் தாழ்வு மனப்பான்மையின்றித் தலைமை தாங்கும் பயிற்சியைப் பெறுவர்."

இவ்வாறு ஏழாலை மகா வித்தியாலயத்தில் அதிபர் திரு. செ. சிவசம்பு தலைமையில் நடைபெற்ற இல்ல மெய்வல்லுநர் போட்டியில் முதன்மை விருந்தினராகக் கலந்து கொண்ட மானிப்பாய் வட்டாரக் கல்வி அதிகாரி திரு. எஸ். தனஞ்செயன் பேசுகையில் குறிப்பிட்டார்.

வித்தியாலய அதிபர் தலைமையுரையில் "மாணவர்கள் பூரண மனிதராக வளர்ச்சியடைவதற்கு அறிவு மட்டும் வளர்ந்தால் போதாது, உடல் நலனும் பேண படவேண்டும். உடல் நலனைப்பேண உடற்கல்வி அவசியமென உணர்ந்த கல்வி அமைச்சு கலைத் திட்டத்தில் அதற்கு முக்கிய இடமளித்துள்ளது. உடற்கல்வியின் ஓர் அம்சமே விளையாட்டு. பரீட்சைகளில் மட்டுமன்றி விளையாட்டுகளிலும் மாணவரின் திறன் வெளிக்கொணரப் படவேண்டும்" என்றார்.

"மாணவர்களைப் பாடசாலைக்கு அனுப்பிவைப்பதோடு பெற்றோரின் கடமை நிறைவடைவதில்லை. பாடசாலைக்குச் செல்லும் மாணவர்கள் ஒழுங்காகக் கற்கின்றனரா, ஆசிரியர்கள் நல்ல முறையில் தமது கடமையைச் செய்கின்றனரா, மாணவர்களிடத்து கட்டுப்பாடும் ஒழுங்கும் பேணப்படுகின்றனவா என்பதையும் கண்காணிக்க வேண்டிய பொறுப்புப் பெற்றோருடையதாகும். ஆகவே பெற்றோர், அதிபரோடும், ஆசிரியரோடும் அடிக்கடி தொடர்பு கொண்டு கலந்துரையாடுவதன் மூலம் மாணவர்களின் நலனைப்பேண ஒத்துழைக்க வேண்டும்" என்றும் அவர் சொன்னார்.

பாடசாலை அபிவிருத்திச் சங்கச் செயலாளர் திரு. த. திருநாவுக்கரசுமும்வித்தியாலய உதவி அதிபர் திருமதி பி.ஜே. குணரத்தினமும் மங்கள விளக்கினை ஏற்றி விளையாட்டுப் போட்டியை ஆரம்பித்து வைத்தனர்.

போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு முதன்மை விருந்தினர் திரு. தனஞ்செயன் கேடயங்களையும், சின்னங்களையும் வழங்கினார் விளையாட்டுத் துறைச் செயலாளர் திரு. சி. செல்லையா ஆசிரியர் நன்றியுரை நிகழ்த்தினார்.

கவிடனில் சமநாடுகளின் மகாநாடு

(ஸ்ரொக்ஹோம்)

சர்வதேச வர்த்தகம், சுங்கப்வரி சம்பந்தமான சில பொது உடன்படிக்கைகளை எட்டுவதற்காக வளர்ச்சியடைந்த, வளர்ச்சியடைந்து வரும் இருபது நாடுகள் பங்கேற்கும் மகாநாடு ஒன்று சுவிடன் தலைநகர் ஸ்ரொக்ஹோமில் ஆரம்பமாகியுள்ளது.

மூன்று நாட்கள் நடைபெறவுள்ள இம்மகாநாட்டில் இந்தியா, ஆர்ஜன்ரைனா, அவுஸ்ரேலியா, கனடா, சலாந்து, பிரிட்டன், அமெரிக்கா, யுகோஸ்லாவியா ஆகிய நாடுகளும் கலந்து கொள்கின்றன.

சர்வதேச ரீதியாக நடைபெறும் வர்த்தக நடவடிக்கைகளை மேலும் தாராளமாக்குவதற்கு இம்மகாநாட்டில் உடன்பாடுகள் ஏற்படலாம் என்று கூறப்படுகிறது.

ஈழமுரசு

கொழும்பில் மீண்டும் சோதனை; பலர் கைதாகி விசாரணையில்

கொழும்பு நகர வீதிகளில் இருவருக்கு மேல் கூட்டமாக நடந்து திரிந்த பல தமிழ் இளைஞர்கள் சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் விசாரணைக்கு அழைத்துச் செல்லப்பட்டனர். கடந்த இரு தினங்களில் நூற்றுக்கும் அதிகமான பல இளைஞர்கள் இவ்வாறு விசாரணைக்காக அழைத்துச் செல்லப்பட்டதாகவும், இவர்களில் பலர் பின்னர் விடுதலையானதாகவும் தெரியவந்துள்ளது. கொள்ளுப்பிட்டியவில் புதிதாக முகாமிட்டிருக்கும் படையொன்றின் வீரர்களும் வீதிப் பாதுகாப்பு, சோதனைகளில் ஈடுபடுத்தப்பட்டுவருவதும் குறிப்பிடத்தக்கதாகும்.

அமைச்சர் லலித் பேச்சு

பொதுமக்களும் இப்போது ஆயுதபாணிகளாகியுள்ளனர்

தற்போதைய நெருக்கடியைச் சமாளிப்பதற்கு ஆயுதப்படை பலம்படுத்தப்பட்டுள்ள அதே வேளையில், இதுவரையில் மக்களுக்கு பாதுகாப்பளிப்பதற்காக மட்டும் பயிற்சியளிக்கப்பட்டு வந்த பொலிசாருக்கு இப்பொழுது யுத்த தந்திர முறைகளிலும் பயிற்சியளிக்கப்பட்டு வருகிறது என்று தேசிய பந்தோபஸ்த்து அமைச்சர் ஸ்ரீ. லலித் அத்துலத்முதலி தெரிவித்துள்ளார்.

பொது வைபவம் ஒன்றில் அமைச்சர் உரையாற்றுகை

திருமலையில்...

...தில் போடப்பட்டுள்ள பாதுகாப்புஏற்பாடுகள் தளர்த்தப்படமாட்டாது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், மூதூர் பகுதியைச் சேர்ந்த சுமார் எண்ணாயிரம் தமிழர்கள் தொடர்ந்தும் அகதிகளாக பாடசாலைகளிலும், ஆலயங்களிலும் வசித்து வருகின்றனர்.

விலேயே இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில் இப்பிரச்சினையை எதிர்நோக்க மக்களும் இப்பொழுது ஆயுதபாணிகளாக உள்ளார்கள் என்று தெரிவித்தார்.

வாழைச்சேனை—

—1-ஆம் பக்கத் தொடர்ராம்.

கடலமயிலிருந்த காவலரணிகள் பயமுறுத்தப்பட்ட பின்னர், கடதாசி ஆலைக்குச் சொந்தமான ட்ராக்டரில் ஏறித் தப்பிச் சென்றதாகப் புகாரில் கூறப்பட்டுள்ளது.

இராணுவ மாது....

—1-ஆம் பக்கத் தொடர்

அரசாங்க அதிபர் தெரிவித்தார். பல பஸ்கள் வவுனியாவை தாண்டிச் சென்றபோதிலும் அவ்வாறு நிறுத்தப்படாமையால், பாதுகாப்புக்கு வந்த ராணுவம் திருப்பி அனுப்பப்பட்டதாம்.

இனப்பிரச்சினையைத் தீர்க்க இந்தியாவுடனான நல்லுறவு அவசியம் என்று வலியுறுத்திய அமைச்சர் இப்பிரச்சினையில் தனி ஒருவர் மட்டும் பொறுப்பேற்க மற்றவர்கள் சும்மா இருக்க முடியாதென்றார்.

அரசின் நிபந்தனை....

பெற்றதை ஒப்புக் கொண்ட உமா மகேஸ்வரன், பொதுவான பெயரொன்றைச் சூட்டுவதில் இன்னமும் இணக்கம் ஏற்படவில்லையெனவும் தெரிவித்தார்.

புலிகள் இயக்கத்துடனும் இணைவதற்கு தற்போது அழைப்பு விடுக்கப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார்.

சகல தமிழ் இயக்கங்களும் ஒன்றிணைந்து போராட்டம் நடத்த வேண்டியேற்படுமெனவும், அவ்வேளையில் இந்திய ராணுவத்தை உதவுமாறு தாங்கள் கேட்கப் போவதில்லை எனவும், பாலஸ்தீன விடுதலை இயக்கத்துக்கு அங்கீகாரம் வழங்கியது போல, தமக்கும் ஆத்மீக ஆதரவு வழங்கினால் போதுமெனவும் உமா மகேஸ்வரன் 'இந்து' பேட்டியில் குறிப்பிட்டுச் சொல்லியுள்ளார்.

இரு பெண்களுக்கு—

—1ஆம் பக்கத் தொடர்

எம். மல்லிகாதேவி (30) ஆகிய இரு பெண்கள் யாழ். மெரிவாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

கட்டடப் பொருள்...

எனில் இரு லொறிகளில் வந்த சுமார் இருபது பேர் அங்கிருந்த குழாய்கள், மின்சார உபகரணங்கள், குளியலறை உபகரணங்கள், வீட்டு உபகரணங்கள், அஸ்பெஸ்டஸ் சீற்றுகள் மற்றும் சில உதிரிப்பாகங்கள் முதலியவற்றை லொறிகளிலேயே எடுத்துச் சென்றதாகப் புகார் செய்யப்பட்டுள்ளது.

ஈழப்பிரச்சினை....

கப பேச்சுவார்த்தைகளை நடத்திய பின்னரும் தமிழர்களுக்கெதிராகத் துன்புறுத்தல் முதலிய சம்பவங்கள் தொடர்ந்து நடைபெற்று வருவதையும் உறுப்பினர்கள் குறிப்பாக எடுத்துக்காட்டினர்.

குருநகர் உணவுக்...

துள்ளார்.

இவ்வேண்டுகோளின் முக்கிய விபரம் வருமாறு:—

உணவுத் தேவையே மனித தேவைகளில் அத்தியாவசியமானதும் முன்னுரிமையளிக்கப்படவேண்டியதுமாகும். இதுவரைகாலமும். வீதிப் போக்குவரத்து முற்றுகைச் சீர்குலைந்திருந்துபோதும் கடல் மார்க்கமாக உணவுப்பொருட்கள் குடாநாட்டை வந்துசேர்ந்துகொண்டிருந்தன.

மேலும் எதிர்காலத் தேவை கருதி மூன்று மாதத்திற்குரிய கையிருப்பைக் கொண்டிருக்க ஏற்ற நடவடிக்கை எடுக்கப்பட்டதுடன் பொதுமக்களினதும், கூட்டுறவுச் சங்கங்களினதும் நன்மை கருதியும், வீதிப்போக்குவரத்துத் தடங்கல் ஏற்படும்போது உணவு விநியோகத்தை உறுதிப்படுத்துவதற்குமாக உணவுப் பொருட்கள் நாவற்குழி, குருநகர் ஆகிய இடங்களில் களஞ்சியப்படுத்தப்பட்டன.

இந்தக் களஞ்சியங்களில், யாழ் குடாநாட்டுக்கு மேலதிக உணவுப்பொருட்களை அனுப்புவதில் மேலிடம் தயக்கங் காட்டக்கூடும் என்பதுடன் யாழ் மக்களைப் பட்டினியால் வாட வைக்கவே இது வழிகோலும் என்றும் அஞ்சப்படுகின்றது. சம்பந்தப்பட்டவர்கள் சகல எதிர்விளைவுகளையும் மனதில் கொண்டு நடந்துகொள்வார்கள் என உணவு இலாகா முற்றாக நம்புகின்றது.

இரு தரப்பும்....

நிறுத்தப் பிரகடனம் செய்யப்பட வேண்டும் எனவும் அத்தீர்மானத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

காலமானார்

குருநகர் பகுதி மக்களிடையே மிகுந்த செல்வாக்குப் பெற்று விளங்கிய சிறந்த சமூகத் தொண்டரும், நாட்டுக்கூத்துக் கலைஞருமான திரு. பி. எஸ். சின்னத்துரை நேற்று முன் தினமிரவு காலமானார். தமிழக நடிகர்களுடன் நடித்த பெருமைக்குரிய இவர் தமிழ் காங்கிரஸின் ஸ்தாபித உறுப்பினராவார். இவருக்கு வயது 89.

மக்கள் விடுதலைக்...

-1-ஆம் பக்கத் தொடர்

பெயரைக் கூறித் தாக்கி, அவருக்கு மரணம் ஏற்படுத்தியது தொடர்பானவர்களுக்கு, மனிதாபிமான முறையில் தண்டனை வழங்கியமைக்காக தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்திற்கு 'இஸ்லாமிய மக்கள் பாதுகாப்பு அமைப்பு' நன்றி தெரிவிக்கும் பிரகடனமொன்றை வெளியிட்டுள்ளது.

கிளிநொச்சி...

...1 ஆம் பக்கத் தொடர்

தருமகுலசிங்கம் (47) என்பவர் சூட்டுக் காயங்களுடன் கிளிநொச்சி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு, பின்னர் ஊரடங்குச் சட்டமாதலால் விசேஷ உத்தரவுடன் யாழ் ஆஸ்பத்திரிக்குக் கொண்டு வரப்பட்ட சிறிது நேரத்தில் மரணமானார். இவரது சடலம் ஆஸ்பத்திரிச் சவச்சாலையில் வைக்கப்பட்டுள்ளது.

மரண அறிவித்தல்

பி. எஸ். சின்னத்துரை (பக்கிரி)

குருநகரைச் சேர்ந்த பிரபல தொழிலதிபரும், கலைஞருமான பி. எஸ். சின்னத்துரை (பக்கிரி) அண்ணாவியார் காலமாகிவிட்டார். இவர் றெஜீனாவின் அன்புக் கணவரும், கிளமென்ரா மரியாம்பிள்ளை, எஸ். எல். மன்னவருயன் (பொறியியலாளர், கனடா), காலஞ்சென்ற றீற்றா பிலோமினா லீனப்பு, பிறிஜட் றஞ்சிதம் ராசதுரை, வில்லி சூரியம்மா போசப், கிறிஸ்டர் பேரின்பநாயகம், சிற்றா அல்போர்ட் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற போசப் மரியாம்பிள்ளை (கொமேர்ஷல் கம்பனி), ஜோன் மேரி மன்னவருயன் (கனடா), லீனப்பு மனுவேற்பிள்ளை (ஓய்வு பெற்ற அரசாங்க உத்தியோகத்தரும், றெத்தினா ஸ்ரோர்ஸ் உரிமையாளரும்), ஏ. சி. இராசதுரை (பிரதம லிகிதர், அபிவிருத்திச் சபை, வட்டுக்கோட்டை), ஏ. யோசப் (வரிப் பரிசோதகர், யாழ். மாநகர சபை), எம். எஸ். பேரின்பநாயகம் (தலைவர், யாழ். மாவட்ட கூட்டுறவு துறைமுக சேவை சமாஜம், முன்னாள் உதவி முதல்வர், யாழ். மாநகர சபை), எம். எஸ். அல்போட் (வர்த்தகர்) ஆகியோரின் மாமனாருமாவார். அன்னாரின் பூதவுடல் 11-06-1985 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 3-30 மணிக்கு அன்னாரின் இல்லத்திலிருந்து நல்லடக்கத்திற்காகக் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

தகவல்: எம். எஸ். பேரின்பநாயகம்

தரமான

தங்க - வைர நகைகளை

எண்ணம்போல்

தெரிவுசெய்ய

யாழ் நகரில் சிறந்த ஸ்தாபனம்

நியூ ஆனந்தா ஜுவல்லர்ஸ்

(வின்ஸர் தியேட்டருக்கு முன்)

185, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்

உ

சிவமயம்

மங்களகரமான திறப்பு விழா

INTERNATIONAL CONNECTIONS

CENTRAL BUS STATION JAFFNA

இன்ரநாஷனல் கனெக்ஷன்ஸ்

மத்திய பஸ்நிலையம் யாழ்ப்பாணம்

நிகழும் குரோதன ஆண்டு வைகாசி 31-ம் திகதி வியாழக்கிழமை காலை (13-6-1985)

10-45—11-30 சுபவேளையில்

திரு. எஸ். கனகரத்தினம்

(தலைவர் யாழ்ப்பாண மாவட்ட வர்த்தகர் சங்கம்)

அவர்களால் திறந்து வைக்கப்படும்.

கொலைபேசி: 24793, 24794

"ஈழமுரசு" சாயிபாபா அட்வாடைசிங் அசோசியேற் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப் பகுதியில் 11-6-1985 செவ்வாய்க்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி: 23336.